# மோத்தி ராஜகோபால் – நெஞ்சில் நீங்கா நினைவுகள்

***தவத்திரு. ஊரன் அடிகளார், வடலூர்***

1965 நான் திருச்சிராப்பள்ளி நகராட்சியில் நகரமைப்புக் கட்டிட இன்ஸ்பெக்டராக பணியாற்றிக் கொண்டிருந்த காலம். ஒருநாள் மாலை, இளைஞர் ஒருவர் எம்மைக் காண அலுவலகத்திற்கு வந்தார். அவரது வீட்டு கட்டிட வரைபட அங்கீகாரத்திற்காக வந்திருப்பதாகக் கூறினார். சம்மந்தப்பட்ட கோப்பை எடுத்துப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தோம். பார்ப்பதற்கு அறிவார்ந்த இளைஞராக தோன்றிய அவரது பேச்சில் ஒரு கனிவு. அறிவுடைமை, ஆர்வமுடைமை, இனிமை முதலிய பலநற்குணங்கள் வெளிப்பட்டன. அவரது தாயார் பெயரில் மனு இருந்தது. அவரது பேச்சில் “அம்மா அம்மா” என்று அடிக்கடி வந்தது. அப்பாவைப் பற்றிய பேச்சே இல்லை. சரி, அம்மா வளர்ப்பு “அம்மா பிள்ளை” போன்று இருக்கிறது என்று எண்ணிக் கொண்டோம். தந்தையார் உளரா? என்று கேட்டோம். இல்லை என்றார். நடந்தவற்றைக் கூறினார். ஒரு நிமிடம் கண்களை மூடித்திறந்து கண்களில் கசிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டோம். சரி நீங்கள் சென்று வாருங்கள், நாளை 10 மணிக்கு உங்கள் வீட்டுக்கு இன்ஸ்பென்ஷனுக்கு வருகிறோம் என்று சொல்லி அனுப்பினோம். இப்படித்தான் மோத்தி ராஜகோபாலுக்கும் எமக்கும் முதல் சந்திப்பு ஏற்பட்டது.

மறுநாள் காலை 10 மணிக்கு, திருச்சிராப்பள்ளி பெரியக்கடைவீதி 176ஆம் எண்ணுள்ள வீட்டுக்கு இன்ஸ்பெக்ஷனுக்கு சென்றோம். எமக்கு முன் சேவகர் ஒண்டிமுத்து வாசலில் சென்று இறங்கினார். மோதி ராஜகோபால் வீட்டு வாசலில் நின்று வரவேற்றார். நகைக்கடையும் வீடுமாக அது இருந்தது. உள்ளே சென்று வீடு முழுவதையும் நன்கு பார்வையிட்டு இன்ஸ்பெக்ஷனை முடித்துக்கொண்டோம். குறையொன்றுமில்லை. வரைபடத்தை அங்கீகாரம் செய்துவிடுவோம் என்று சொல்லிப் புறப்பட்டோம்.

காபி அருந்த வேண்டும் என்பதை நினைவுறுத்தினார். அதற்குரிய இசைவை முதல்நாளே அவர் எம்மிடம் பெற்றிருந்தார். உத்தியோக விஷயத்தில் நாம் நெருப்பு, வெளியே தண்ணீர் கூட அருந்துவதில்லை. தாகம்

ஏற்பட்டால் நகராட்சி குடிதண்ணீர்க் குழாயில் தண்ணீர் பிடித்து அருந்த ஒரு காலி சோடா பாட்டிலை சேவகர் ஒண்டிமுத்து எப்போதும் கையில் வைத்திருப்பார். அப்பேர்பட்ட நாங்கள் அன்று காலை மோதி ராஜகோபால் வீட்டில் உள் ஹாலில் அமர்ந்து காபி அருந்தினோம். மோதியின் அன்னையார் மிகச்சிறந்த குணவதியாராகத் தென்பட்டார். மோதியின் வீட்டில் இருந்த புத்தகக்குவியல்களும் (அடுக்கு) கண்ணில் தென்பட்டன. எண்ணத்தைக் கவர்ந்தன.

தோற்றம், நடை, உடை, பாவனைகளில் நாம் வித்தியாசமாக விளங்குவதைப் பற்றி கேட்டார். நாம் நைட்டிக பிரம்மச்சாரி என்றும், படிப்பே நம் முதற்பணி (உத்தியோகம் இரண்டாவது) என்றும் நம் வீட்டில் சொந்த நூலகத்தில் இரண்டாயிரம் நூல்கள் உள்ளன என்றும் கூறினோம். வீட்டுக்கு வந்து சந்திக்கலாமா? என்று கேட்டார். தாராளமாக என்று கூறியதோடு, வருகையை விரும்புவதாகவும் கூறினோம். அவரை ஊக்குவிக்க விரும்பியே அவ்வாறு கூறினோம்.

அடுத்த சில நாட்களுக்குள்ளேயே, சமயபுரத்திற்கு எமது வீட்டுக்கு வந்து விட்டார். காரில் வந்து இறங்கினார். அப்போது எமது தந்தையாரும் இருந்தார். ராஜகோபாலும், நாமும் இரண்டு மணிநேரம் பேசிக் கொண்டிருந்த பின் அவர் புறப்பட்டுச் சென்றார். வயதில் உன்னை விட இளையவராக இருப்பார். ஆனாலும் அதிக புத்திசாலியாக இருக்காரே, நல்லவராகவும் இருப்பார்போல் தெரிகிறது. என்று எம் தந்தையார் பாராட்டிக் கூறினார். கற்றாரை கற்றாரே காமுறுவர் என்பது போல எங்கள் பழக்கம் நட்பாயிற்று. அதன்பின் அடிக்கடி சந்திப்பு நேரும். சந்திப்பு எல்லாம் சிந்திப்பாகவே இருக்கும். அன்றைய திருச்சிராப்பள்ளியில் அறிவுலகில் அவர் வளர்ந்து வரும் ஒரு அறிஞர் பெருஞ்சுடர்.

தந்தையொடு கல்விப்போம் என்ற பழமொழி இவருக்கு பொருந்தாது. பெரியார் முதலாக ஜெயகாந்தன் உட்பட பெரியவர்கள், அறிஞர் பற்பலரை, நேரில் சென்று பார்த்துப் பழகி அறிவை அகலப்படுத்திக் கொண்டே (விரிவுபடுத்திக் கொண்டே) ஒரு இளம்பருவ மேதையாக ராஜகோபால் அந்நாளில் (1960-களில்) திகழ்ந்தார்.

திருச்சிராப்பள்ளியில் எமது கல்லூரி முதல்வர் எம்.எஸ்.சீனிவாச சர்மா, எம் நண்பர் ஜி.வி.பிள்ளை (வன்மிகநாத பிள்ளை) முதலில் பலர் ராஜகோபாலுக்கும் நட்பாயினர்.

அக்காலத்தில் நான் உத்தியோகம் பார்த்ததோடு, திருச்சிராப்பள்ளி மாவட்ட சன்மார்க்க சங்கத்தின் தலைவராகவும் இருந்தோம். வள்ளலார் வடலூரில் நிறுவிய சத்திய தர்மசாலையின் நூற்றாண்டு விழா நாளும், எமது 35-ஆம் அகவை தொடக்க நாளுமாகிய 23.05.1967-இல் நாம் உத்தியோக விடுப்புத் துறவு பூண்டோம். அந்த விழாவுக்கு எம் நண்பர் பொள்ளாச்சி அருட்செல்வர் திரு.நா.மகாலிங்கம் அவர்களும் வந்திருந்தார். நாம் துறவு பூண்ட நாளில் (23.05.1967) அன்றைய பகல்; உணவு விருந்து எமக்கும் மகாலிங்கம் அவர்களுக்கும் மோதி வீட்டில் தான் படைக்கப்பட்டது.

புத்தர் ஞானம் பெறுவதற்கு முன் அளிக்கப்பெற்ற விருந்து சுஜாதையின் பால் பாயசம், நாம் துறவு பூண்ட பின் அளிக்கப்பெற்ற முதல் விருந்து மோத்தி ராசகோபால் வீட்டில் தான். அதுவும் அன்று எம்மோடு உடனிருந்து விருந்தருந்தியவர் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள். எங்கள் இருவருக்கும் விருந்து அளித்தவர் திருச்சிராப்பள்ளி மோத்தி ராஜகோபால்.

1969-இல் நாம் திருச்சிராப்பள்ளி சமயபுரத்தை விட்டு, வடலூர் வாசியாகி விட்டோம். அதன்பின்பும் அவ்வப்போது எங்கள் பழக்கமும் நட்பும் தொடர்ந்தது. மாதம் ஒருமுறை திருச்சிராப்பள்ளிக்கு வருவோம். அப்போதெல்லாம் தவறாது சந்திப்பும், சிந்திப்பும் நடைபெறும்

2003 மே 22-இல் சென்னையிலும், 26-இல் வடலூரிலும், 29-இல் திருச்சிராப்பள்ளியிலும் எமது 70-ஆம் அகவை நிறைவு விழாக்கள் நிகழ்ந்தன. திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்த விழாவில் மோத்தி கலந்து கொண்டு சிறப்பித்தார். வாழ்த்துப் பெற்றார். அன்றே அவரை யாம் கடைசியாகக் கண்டது (என்று நினைவு). எங்கள் தொடர்பை விரித்து ஒரு சிறு புத்தகமே எழுதலாம். அவ்வாறு செய்திகள் உள. யாம் எழுதவிருக்கும் திருச்சிராப்பள்ளி வரலாற்றில் சில செய்திகள் சேரும். எமது சுயசரிதத்திலும் சேரும்.

மோத்தி இராசகோபால் எம் நெஞ்சில் என்றும் நீங்காத ஒருவர். அவரது மகனார் மோத்தி இராச.சீனிவாசன் அவர்கள் தந்தையார் பணிகளைத் தொடர்ந்து வருவதில் மகிழ்ச்சி கொள்கிறோம். மேலும் மேலும் வளர, வளர்ந்து ஓங்க வாழ்த்துகிறோம்.

வாழ்க! வாழ்க!